செய்தி வெளியீடு எண்– 595 நாள். 23.7.2008

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கணிணி கல்வி சமநிலைத் திட்டம்

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் கணினி கல்வி சமநிலை திட்டத்தினை செயல்படுத்தும்முகமாக, தமிழக அரசுக்கும், அமெரிக்க இந்திய பவுண்டேஷன் நிறுவனத்திற்கும் இடையே, மாண்புமிகு பள்ளி கல்வித் துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு அவர்களின் முன்னிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இன்று (23.7.2008) சென்னை–தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில்–பள்ளிக் கல்வித்றைச் செயலர் திரு எம்.குற்றாலிங்கம், இ.ஆ.ப., அவர்களும், அமெரிக்க இந்திய பவுண்டேஷன் சார்பில் – அதன் இயக்குநர் திரு J. சுந்தர கிருஷ்ணன் அவர்களும் கையெழுத்திட்டனர்.

அமெரிக்க இந்திய பவுன்டேஷன் நிறுவனம், தமிழ்நாடு அரசுடன் இணைந்து கணினி கல்வி சமநிலை (Digital Equalizer Programme) திட்டத்தினை தமிழகத்திலுள்ள கடலோர மாவட்டங்களில் உள்ள 150 அரசுப் பள்ளிகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு அனைவருக்கும் கல்வி இயக்கக திட்டத்தின் மூலம் பள்ளிகளில் புதிய அணுகுமுறைகளை முனைப்பாக செயல்படுத்துகிறது. குறிப்பாக கல்வியில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் செயல்வழிக் கல்வி முறை போன்ற திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் தமிழக அரசு முன்னோடியாக உள்ளது. தமிழ்நாடு அரசுடன் அமெரிக்க இந்திய பவுன்டேஷன் இணைந்து இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதில் முன் மாதிரியாக விளங்கும்.

இத்திட்டத்தின்படி தமிழக அரசு பள்ளிகளுக்கு கணினி மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும். அமெரிக்கன் இந்திய பவுன்டேஷன் நிறுவனம் பள்ளிகளில் பயிற்சி மற்றும் பள்ளிகளுக்கு வேண்டிய முழு ஒத்துழைப்பு தரும். கற்றல் தாக்கத்தினை நீண்ட காலம் நிலை நிறுத்திட இந்த தொழில் நுட்பம் துணையாக உள்ளது. மற்ற தகவல் தொழில்நுட்பம் மாதிரியில்லாமல் இத்திட்டம் ஆசிரியரை மையமாக வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு வலுவான பயிற்சியும், அப்பயிற்சியினை தொடர்ந்து இத்திட்டத்தினை சிறப்பாக நடத்திட முழு ஒத்துழைப்பும் நல்கிட இத்திட்டம் வழிவகை செய்துள்ளது. இதைத்தவிர இத்திட்டம், பள்ளிகளில் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு நடந்திட முழு ஒத்துழைப்பு தரவும் உத்திரவாதம் அளித்துள்ளது. இந்த தீவிர பயிற்சி மூன்றாண்டுகளுக்குப் பின் அமெரிக்க பவுண்டேஷன் தனது ஆதரவை விலக்கிக் கொன்டாலும், பள்ளிகளே இந்த திட்டத்தை தொடந்து நடத்த இயலும். இந்த

மூன்றாண்டுகளில் பள்ளியின் உள்ள ஆசிரியர் மற்றும் பள்ளி நிர்வாகிகளை ஒவ்வொரு வாரமும் பயிற்சிக்கு உட்படுத்தி இத்திட்டத்தினை சிறப்பாக செயல் படுத்த வாய்ப்புள்ளது.

கல்வித்துறையின் மாநில / மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள் திட்ட மீள் பார்வை செய்து பயிற்சியினை மேம்படுத்திட ஆய்வு மேற்கொள்வார்கள் மூன்றாண்டு இறுதியில் இத்திட்டத்தினை சிறப்பாக தொடர்ந்து நடத்திட தேவையான முழுஅறிவு மற்றும் திறன்களை ஆசிரியர்களும் பள்ளி நிர்வாகிகளும் பெற்றிடுவர். நீண்ட கால புதிய கற்றல் அணுகுமுறைகளை பயன்படுத்துவதன் முலம் கற்றல் விளைவுகளை ஏற்படுத்த முடிகிறது. கணினி உதவியுடன் நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்திட செய்திகளை சேகரிக்க, பிரச்சினைகளுக்கு தீர்வு கானவும் மாணவர்களின் திறன் வளர்த்தல் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துப் பாடங்களிலும் கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளோடு இந்தத் தொழில் நுட்பம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, தமிழகத்தில் கடலோர மாவட்டங்களிலுள்ள 42 பள்ளிகள் வரவழைக்கப்பட்டு, அதில் 7 பள்ளிகள் இப்பயிற்சி முறைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இதே முறையினைப் பின்பற்றி தமிழ்நாட்டிலுள்ள மற்ற பள்ளிகளிலும் இந்த முறை செயல்படுத்த பரிசீலிக்கப்படும். இந்த 3 ஆண்டு கால பயிற்சியின் மூலம் மாணவர்கள் தங்களுடைய பாடத் திட்டங்களை அவர்களே திட்டமிட்டு செயல்படுவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்கள், MSc / BSc., பாடத்திட்டங்களைக்கூட எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய அளவில் இந்த பயிற்சி முறைகள் அமையும். இது மாணவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கும். இந்த பயிற்சி, மாணவர்களை ஊக்கப்படுத்துதற்கு ஒரு தூண்டுகோலாக அமையும். இப் பயிற்சியில் கிடைக்கும் அனுபவங்கள் மாணவர்கள் அன்றாட நடைமுறை வாழ்க்கையிலும் செயல்படுத்திட வழிவகுக்கும். இப்பயிற்சியில் 6 ம் வகுப்பிலிருந்து 10 ம் வகுப்பு வரையிலான மாணவ–மாணவியர் கலந்து கொள்வர். இப்பயிற்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மாநில அரசு தந்துதவும். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள பள்ளி ஆசிரியர்களும் பயிற்சியினை பெற்று பயன்பெறுவர். அமெரிக்கன் பவுண்டேஷனிலிருந்து நாடு முழுவதும் 25 குழுக்கள் இப்பணிக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 5 லிருந்து 6 பள்ளிகளை ஒரு குழு நிர்வகிக்கும்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9